உ

கடவுள் துணை

திருச்செந்தூர்

ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி

# நலுங்கு புஸ்தகம்



இஃது

மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலில்

புஸ்தகவியாபாரி

**S. அய்யாசாமிபிள்ளை**

அவர்களால்

வெளியிடலாயின

மதுரை விக்டோரியா பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது

ணு ½] 1924 [இதன் விலை பைசா 6

Q26:417
N24
181891

உ

சிவமயம்

# நலுங்குப்பாட்டு

## காப்பு.

குலுங்கிடா ஸ்தனத்தின் மாதற் குவலயந்தனிலுள்ளோர்கள்
தெலுங்கினில் வடித்தெடுத்த தேன்பாகு போலேயொத்த
நலுங்கினை குமார வேள்மேல் நன்றாகப் பாடுதற்கு
கலங்கிடா மனத்தருள்செய் கணபதி காப்பதாமே.

வேண்டி மிகத் துதிப்போர்க்கு விருப்பமுட னருள் செய்யும்
தூண்டிக் கணபதியடியை துதித்து நல்ல நலுங்குசொல்வேன்

கணபதிக்கி நேறிளைய கந்தனிரு தாள்பணிந்து
குணமுடனே சபைதனிலே கூசாமல் நலுங்கு சொல்வேன்.

பச்சமயி லேறும் யெங்கள் பன்னிருகை வேலவன்மேல்.
நிச்சயமா யான்பாடி நித்தமும் நலுங்குசொல்வேன்

இத்திசையோர் தான்போற்றும் ஈசனருள் தன் மகனும்
வெற்றிவடி வேலவன்மேல் விருப்பமுடன் நலுங்குசொல்வேன்

வள்ளிக்கி யேத்ததொரு வடிவேல் முருகன் தன்மேல்
தெள்ளு தமிழாலே நானும் தீர்க்கமுடன் நலுங்குசொல்வேன்

அன்பருக்கு அன்பனை [illegible]ருகன்றன்மேல்
இன்பமுடன் செந்தமிழால் விணக்கமுடன் நலுங்கு சொல்வேன்.

நலுங்குப்பாட்டு.

சத்திபரன் தன்மகனும் சண்முகவேள்
பக்தியுடன் பண்பாடி பாங்குடனே ந

தேவாதி தேவன்மகன் திருச்செந்தில்
ஆவலுடன் பாண்பாடி அன்புடனே ந

நலுங்குப்பாட்டு முற்றி

## கதவு திறக்கிற

மாப்பிள்ளை சொல்கி

தேன்மொழிமாதே கதவைத்திறவாய்
திகைத்தங்கே தனித்திருப்பானேன்-நல்ல
தேனே சுகிக்கலாம் அடிமானே.

பெண் சொல்கிறது.

கதவைத்திறவென்றால் யாரென்ன பேரென்ன
களங்கமில்லாமல். சொல்லும்சாமி-முன்னாள்
பழக்கம் தான் உமக்குண்டா சாமி.

மாப்பிள்ளை சொல்கிறது.

பழக்கமில்லாவிடில் கதவினைத் திறவாயோ
பத்தாவும் நானல்லவோ மானே-இப்போ
உத்தது சொன்னேனடி தேனே.

பெண் சொல்கிறது.

உத்தமொழிகள் சொல்லி எத்தவந்தீரோ சாமி
அத்தனூத்திரி தனிவனே-நீரும்
கத்தவித்தைக எதிவேனே.

நலுங்குப்பாட்டு.

மாப்பிள்ளை சொல்கிறது.

...னைக் கண்டறிந்த மானே

...ான் நானே—நீயும்

...வாதேனே.

பெண் சொல்லுகிறது.

... சமயமீதல்ல சாமி

... இருக்கேனே—என்தன்

...மத்தானே

மாப்பிள்ளை சொல்லுகிறது

...களை வேண்டாம் உன்மனம்போல் நடப்பேன்

குற்றஞ்செய்ததைப் பொருமானே—நீயும்

சற்றே யிறங்கிவாவா தேனே.

பெண் சொல்லுகிறது

இறங்கிவாவென்றீர்சாமி இதிலப்பருப் பமியாது

இந்தராத்திரி தனில்த் தாமே—நீரும்

வந்தவழியைத் தேடிப்போமே.

மாப்பிள்ளை சொல்லுகிறது

வந்தவழிபேபோக வகையறிபேன் பெண்ணே

சிந்தையில்க் கோபம் வேண்டாம் கண்ணே—செந்திக்

கந்தன் கிருபை செய்வார் பெண்ணே

பெண் சொல்லுகிறது.

கந்தவேளென்றவார்த்தை காதில் கேட்டவுடனே

சிந்தையி லன்புகொண்டுதடி—வந்

தவந்தசதவைத் திறந்தானே.

மாப்பிள்ளை சொல்லுகிறது.

கதவைத் திறந்தவுடன் கந்தனும் வள்ளியும்போல்
பிதமுடன் சப்ரமஞ்ச மீதே நல்ல நாதன்
நிதமும் கூடிக்கலந்தப்போபோதே

கதவு திறக்கிற பாட்டு முற்றிற்று.

---

பூப் பந்தாடுகிற பாட்டு.

பெண் சொல்லுகிறது.

மல்லிகைப்பூவே என்சாமி மனதில்சந்தோசம் தானும்வைத்து
எல்லோரும் பார்க்கத்தபவுசெய்து என்னோடே பூப்பந்தாடவாரும்

மாப்பிள்ளை சொல்கிறது.

வருகிரேன்பெண்ணே வருகிறேன் வருத்தமிகநீயும் படவேண்டாம்
இருவரும் நல்லயெதிராகயிருந்துகொண்டு பூப்பந்தாட.

பெண் சொல்கிறது.

முல்லைப்பூவே யென்சாமி மோகங்கொண்டே னான் உந்தன்மேலே
எல்லோரும்பார்க்கத் தபவுசெய்து என்னோடே பூப்பந்தாடவாரும்

மாப்பிள்ளை சொல்கிறது.

வருகிறேன்பெண்ணே வருகிறேன் வருததமிகநீயும் படவேண்டாம்
யிருவரும் நல்ல யெதிராகயிருந்துகொண்டு பூப்பந்தாட

பெண் சொல்கிறது.

பிச்சிப்பூவே யென்சாமி பிரியம்யென்மேலே தானும்வைத்து
எல்லோரும்பார்க்கத் தபவுசெய்து என்னோடே பூப்பந்தாடவாரும்

மாப்பிள்ளை சொல்கிறது.

வருகிறேன்பெண்ணே வருகிறேன் வருத்தமிக நீயும்படவேண்டாம்
யிருவரும்நல்ல யெதிராக யிருந்துகொண்டு பூப்பந்தாட

பெண் சொல்கிறது.

யிருவாட்சிபூவே யென்சாமி எந்தன்பேரில் பட்சம்வைத்து
எல்லோரும் பார்க்கத்தயவுசெய்து என்னோடு பூப்பந்தாடவாரும்

மாப்பிள்ளை சொல்கிறது.

வருகிறேன்பெண்ணேவருகிறேன் வருத்தமிகநீயும் படவேண்டாம்
யிருவரும்நல்ல யெதிராக யிருந்துகொண்டு பூப்பந்தாட.

பூப்பந்தாடுகிற பாட்டு முற்றிற்று.

---

## கட்டியம்.

தந்தைக்கு வுபதேசல் அருளியசிவகுரு
சண்முகமான சமுகம்
சப்தரிஷிகள் இன்னறர் இம்புருடர் உளைவந்து
தான்போற்றுகின்ற சமுகம்
அர்தரம்தனிலுள்ள மாதர்கள் வரிசையாய்

ஆடல்புரிகின்றசமுகம்
அரியதவ முனிவர்கள் சித்தாதி சித்தர்கள்
அநுதினம் வணங்குவர் சமுகம்
மூர்த நான்மறைசொர்ந்து தேடியும் காணாத

# நலுங்குப்பாட்டு.

முக்கண்ண னின்றசமுகம்,
மொய்குழல் வள்ளியர்க் காகவே வேங்கை
மரமாகியே முளைத்தசமுகம்

துந்துமியெக்காள சின்னங்களூதிவர
தொண்டர்கள் போற்றுமாசமுகம்
தொந்தோமென்றே நடனமிடும் தோகைமயிலில்வரும்
சுப்பிரமண்ணியன் சமுகமே

அயில்வேல் கரத்தேந்தி வொய்யிலாக மயில்மீதில்
ஆடல்புரிகின்ற சமுகம்,
அரியதவ முனிவர்கள் சித்தாதிசித்தர்கள்
அனுதினம்வணங்குமா சமுகம்

கயிலாச கிரிவாசனுக்கு வுபதேசித்த
கந்தனென வந்தசமுகம்
கானகந் தன்னிலோர் வேங்கைமரமாகி
கனமுடன் முளைத்தமாசமுகம்

குயிலோசை மொழிமாது வள்ளிதெய்வானையை
கூடிப் புணர்ந்த—மாசமுகம்,
கும்பஜன முனிதனக் குறுகுருவாகியே
குமரனெனவந்த சமுகம்

பயிலாக வந்தாண்மை பேசிய அரசனைப்
பதைக்கத் துலைத்தசமுகம்
பாரிலுள்ளோர் கண்டுதொழும்
பன்னிருகையச் சமுகம்பாடவும் சகலசுகமே

நலுங்குப்பாட்டு முற்றிற்று.

# ஸ்ரீ லிங்காஷ்டகம்

1 பிர்ம்ம முராரிசுரார்ச்சிதலிங்கம்
நிர்மலபாஸித சோபிதலிங்கம்
ஜென்மயதுக் கவினாஸகலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

2 தேவமுனிப்ரவ ரார்ஜிதலிங்கம்
காமதனககரு ணாகரலிங்கம்
இராவணதர்ப்ப வினாஸகலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

3 ஸர்வசுகந்தஸு லேபிதலிங்கம்
புத்திவிவர்த்தன காரணலிங்கம்
சித்தஸுராஸுர வந்திதலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

4 ஹைம மஹாமணி பூஜிதலிங்கம்
பணிபதிஹாரஸு சோபிதலிங்கம்
தக்ஷசுயக்ய வினாஜகலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

5 குங்குமசந்தண லேபிதலிங்கம்
பங்கஜஹாரஸு ஸோபிதலிங்கம்
சஞ்சிதபாப வினாஸகலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

6 தேவகணார்ச்சித ஸேவிதலிங்கம்
பத்தியா பாபாவ பாவிதலிங்கம்
திரகரகோடிப்ர பாகரலிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

7 அஷ்ட்டதளோ பரிவேஷ்ட்டிதலிங்கம்
ஸர்வதமுத்பவ காரணலிங்கம்
அஷ்ட்டதரித்ர வினாசகலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

8 ஸுரகுருஸுரவர பூஜிதலிங்கம்
சுரவனபுஷ்ப சதார்ச்சிதலிங்கம்
பராத்பரம் பரமாத்மகலிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்